
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1245

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

63

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

இலவச மின்சாரத் திட்டத்தையும் ஒன்றாகக் கலந்து குறிப்பிடுவர். ஆனால், அது முழு உண்மையில்லை. 1990-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் கிடைக்கவில்லை. சிறு விவசாயிகளுக்கு மட்டும் சலுகை இருந்தது. பெரிய மற்றும் நடுத்தர விவசாயிகள் குதிரைத்திறன் (HP) அடிப்படையில் கட்டணம் செலுத்திக்கொண்டிருந்தனர்.

1989-இல் கழக ஆட்சி அமைந்த பிறகுதான் இந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. முதலில் பெரிய விவசாயிகளுக்கான கட்டணம் குறைக்கப்பட்டது. பின்னர், 1990-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் அனைத்து விவசாய பம்புசெட்டுகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1990-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி அரசாணையின் மூலம், 'விவசாயிகளுக்கு மின்சாரத்திற்குக் கட்டணம் இல்லை' என்று சட்டரீதியாக அறிவிக்கப்பட்டது.

1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் அனைத்து விவசாய மின் இணைப்புகளுக்கும் மாற்றியது. பின்னர், நாடாளுமன்றத்தில் விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் தொடர்பாக நடைபெற்ற ஒரு விவாதத்தில், 1990-ஆம் ஆண்டு கலைஞர் அரசின் உத்தரவால், சுமார் 16 இலட்சம் விவசாயிகள் பயனடைந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*NATIONAL INSTITUTE OF PUBLIC FINANCE AND POLICY (NIPFP)* என்கிற ஆய்வில் கூறப்பட்டுள்ள மற்றுமொரு முக்கியமான தகவல், 1990-ஆம் ஆண்டில் அனைத்து விவசாய பம்புசெட் பயனாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டதன் விளைவாக, "தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு சுமார் 400 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது" என்று அந்த ஆய்வு பதிவுசெய்கிறது. அந்தக் காலகட்டத்தில் ரூ.400 கோடி என்பது மிகப்பெரிய தொகை.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் முடிவினையும், அரசுக்கு ஏற்படும் இழப்பினையும் சமூக நீதித் திட்டங்களின் தொடர்ச்சியாகவே அணுகினார் கலைஞர். அதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம்

# விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், வரலாற்றை மாற்றிய வாக்குறுதி!



1989-ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்தார் கலைஞர். அவரது முதல் யோசனையே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அறிவிக்கும் திட்டமாக இருந்தது. ஏனென்றால், கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகள் விவசாயச் சங்கங்களின் எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்யும் வகையில் இருந்தன.

அப்போதைய மின்வாரிய உயரதிகாரிகள் "அதிக செலவாகும்; இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் மின்சாரம் இலவசம் என்று கிடையாது" என்று கூறுகின்றனர். அதற்குப் பதிலளித்த கலைஞர், ''விவசாயிகள் கஷ்டப்படுறாங்க. அவங்களுக்குப் பயன்படுற மாதிரி ஏதாவது நல்ல திட்டம் வேணும்னு தோணுது. அதனால, இதுதான் சரியா இருக்கும்னு நினைக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளதை 'நெஞ்சுக்கு நீதி' குறிப்புகளில் இருந்து காணமுடிகிறது.

1990-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி வெளியான அரசாணையில், ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் - சிறு, குறு, பெரிய விவசாயிகள் என்ற எந்தப் பாகுபாடும் இல்லாமல், அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 'பம்புசெட் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசம்' என அறிவித்தார். இதனால் பலன் அடைந்த விவசாயிகளின் அப்போதைய எண்ணிக்கை 16 இலட்சம். இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்காக 'மின்சாரம் இலவசம்' என்று கொண்டுவரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம் அது.

'விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்' என்ற வரலாறு பேசப்படும்போது, 1984-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். சிறு விவசாயிகளுக்கு வழங்கிய சலுகையையும், 1990-இல் கலைஞர் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கிய கட்டணம் ரத்துசெய்யப்பட்டது. பின்னர், 1990-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணைமூலம் "விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் இல்லை" என்ற நிலை சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட்டது. அப்போது, தமிழ்நாட்டில் சுமார் 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாய மின் இணைப்புகள் இருந்ததாகப் பின்னாளில் அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இணைப்புகள் தவிர, 1990-ஆம் ஆண்டு 41 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கும், 1991-ஆம் ஆண்டு 40 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது.

இதுதான் இந்திய வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு மாநில அரசு, விவசாயப் பயன்பாட்டிற்கான அனைத்து மின் இணைப்புகளுக்கும் முழுமையான இலவச மின்சாரத்தை வழங்கிய நிகழ்வாக வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

### அரசுக்கு ஏற்பட்ட இழப்பு

கலைஞர் மேற்கொண்ட இந்த முடிவும், அதற்கு சட்டரீதியாக அவர் அளித்த உறுதியும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்யப்பட்டது. ஆனால் அடுத்து வந்த ஆட்சியில், அதற்குப் பெரும் ஊறு செய்தார் அம்மையார் ஜெயலலிதா.

> **இந்திய வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு மாநில அரசு, விவசாயப் பயன்பாட்டிற்கான அனைத்து மின் இணைப்புகளுக்கும் முழுமையான இலவச மின்சாரத்தை வழங்கிய நிகழ்வாக வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.**

### இடையூறு ஏற்படுத்த முயற்சி

1991-ஆம் ஆண்டில் அம்மையார் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தைச் சீரமைக்கிறேன் என்று, 'இலவச மின்சாரத்தை ரத்துசெய்வதாக' அறிவித்தார். கழகம் போராட்டத்தைக் கையில் எடுத்தது. தொடர்ச்சியாக மக்கள் மன்றத்துக்குப் பிரச்சினையைக் கொண்டுசென்ற நிலையில், 'இலவச மின்சாரம் அனைவருக்கும் இல்லை, பெரிய விவசாயிகளுக்கு மட்டும் கட்டணம் விதிக்கிறோம்' என்றனர்.

ஒரு குதிரை சக்தி (HP) மோட்டாருக்கு ஓர் ஆண்டுக்கு ரூ.100 வீதம் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் அதனை 6 மாதத்துக்கு ஒருமுறை இரண்டு தவணைகளில் செலுத்தலாம் என்றும் உத்தரவிட்டது. முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பைப் பெற்றவர்கள், ஒரு குதிரை சக்திக்கு 150 ரூபாய் வீதம் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அறிவித்தது.

அன்றைய நிலையில், மின்சார பம்புசெட் வைத்துள்ள சிறு விவசாயிகள் எண்ணிக்கை 98 ஆயிரம் என்றும், அவர்களைத் தவிர 11.50 இலட்சம் பம்புசெட்டுகளை வைத்துள்ள மற்ற விவசாயிகள் மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைக் கண்டித்து விவசாய சங்கங்கள் கொதித்தெழுந்தன. போராட்டங்களை அறிவித்தன. அவர்களுக்கு ஆதரவாகக் களமிறங்கியது கழகம். 1992-ஆம் ஆண்டு ஜூன் 11-ஆம் தேதி, தமிழ்நாடு முழுவதும் வேலை நிறுத்தப்போராட்டம், பேரணி, ஆர்ப்பாட்டத்தை அறிவித்தது கழகம்.

...தொடரும்

## 'தூய சக்தி' வேடம் கிழிந்தது!

அ.தி.மு.க.வில் இருந்து ஆறாவது சட்ட மன்ற உறுப்பினராக ராஜினாமா செய்திருக்கிறார், கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர். ஏற்கெனவே விராலிமலை விஜயபாஸ்கர், இணைப்பு விழாவுக்காகக் காத்திருக்கிறார். இசக்கி சுப்பையா, மரகதம் குமாரவேல் உள்ளிட்ட நால்வர் த.வெ.க.வில் இணைந்துவிட்டனர். முடிவில்லாமல் போய்க்கொண்டே இருக்கும் த.வெ.க.வின் இந்த PURCHASE-ஐ ஜனநாயக சக்திகள் பலரும் கடுமையாகக் கண்டித்துவருகின்றனர்.

இதுதொடர்பாகப் பதிவிட்டுள்ள பத்திரிகையாளர் பரக்கத் அலி, "கரூர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் சேரப்போகும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது 31 வழக்குகள் உள்ளன. அ.தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக சொத்துக்குவிப்பு வழக்கு, ரூ.100 கோடி நில அபகரிப்பு வழக்கு ஆகியவை உள்ளன.

கரூரில் ரூ.100 கோடி மதிப்புள்ள 22 ஏக்கர் நிலத்தைப் போலியான ஆவணங்கள் தயாரித்து, மிரட்டல் விடுத்து அபகரித்துக் கொண்டதாக அவர்மீது வழக்குப் பதியப்பட்டுள்ளது. ஆள் கடத்தல், தாக்குதல், கொலை மிரட்டல், போலி ஆவணங்கள் தயாரித்தல் என இ.பி.கோ.வின் அத்தனை பிரிவுகளையும் தாங்கி நிற்கிறார், எம்.ஆர்.விஜயபாஸ்கர். அவரைத் தாங்கிக்கொள்ளபோகிறது தூயசக்தி!

"மக்கள் பணத்திலிருந்து ஒரு பைசாகூடத் தொட மாட்டோம். தொடவும் விட மாட்டோம். தொட்டால் விடமாட்டோம். இதற்கு முன்னால் தொட்டவர்களையும் விடமாட்டோம்" என்று சில நாட்கள் முன்புதான் முதல்வர் விஜய் பேசினார். அது, 'சினிமா டயலாக்' என்று நினைத்து மறப்போம், மன்னிப்போம்!

ஒண்ணு கவனிச்சீங்களா? எம்.ஆர்.விஜயபாஸ்கர் ராஜினாமா செய்தியும் கரூர் நெரிசலில் இறந்த 41 பேர் குடும்பங்களையும் விஜய் விரைவில் சென்று பார்க்கப்போகிறார் என்ற தகவலும் ஒரே நேரத்தில் வருது!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



இரா.அறிவழகன்



### தலைவர் தட்டிக்கொடுத்து வாழ்த்து!

1984-ஆம் ஆண்டு, ஒரு போராட்டத்தில் பங்கேற்க சிதம்பரம் நகரத்துக்கு ரயில் மூலம் வருகைதந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது, நள்ளிரவு ஒரு மணி இருக்கும். என் தந்தையார் மருதூர் இராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவராக இருந்தவர். நான் கூட்டத்துக்குள் இருந்தபடி, 'தலைவர் கலைஞர் வாழ்க' என்று முழக்கமிட்டதைப் பார்த்த தலைவரிடம், நிர்வாகிகள் 'இராமலிங்கம் பையன்' என அறிமுகப்படுத்தினர். இதையறிந்த என் தந்தை, மறுநாள் காலை தலைவரை சந்திக்க என்னையும் அழைத்துச்சென்றார். அப்போது தலைவர், என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தியதை என்னால் மறக்க முடியாது.

**- இரா.அறிவழகன்,**
**ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், மருதூர், சிதம்பரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பேச்சுரிமைக்கு எதிரான தடையை மீறுவது...

1958-ஆம் ஆண்டு ஜனவரி 6-ஆம் தேதி, பிரதமர் நேருவுக்கு கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தை அறிவித்தது கழகம். 3-ஆம் தேதி, கடற்கரையில் பொதுக் கூட்டம் நடத்தவும் திட்டமிட்டது. இதையடுத்து, 1957-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி முதல் 15 நாட்களுக்கு, சென்னையில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மக்களின் பேச்சுரிமையை மறுக்கும் இந்தச் செயலைக் கண்டிக்கும் விதமாக, கழகத்தின் அடிப்படைக் கொள்கையின்படி தடையை மீறுவது என முடிவுசெய்தது கழகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900